




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மகளிர் திட்டம் மூலம், நாகர்கோவில், ஸ்காட் கிறிஸ்துவ கல்லூரியில் வேலை வாய்ப்பு முகாம் இன்று (21.12.2016) நடைபெற்றது. மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. டி.ஹெட்ஸி லீமா அமலினி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 895/2016 நாள்: 21.12.2016

**வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் இளைஞர்கள் முகாமில் கலந்து கொள்ள வேண்டும். கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (21.12.2016) நடைபெற்ற, வேலைவாய்ப்பு முகாமில் பேச்சு.**

தமிழக அரசின் மூலம் படித்து, வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிட, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் மூலம், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக ஊரக பகுதிகளில் நிலையான வாழ்வாதாரத்தை உருவாக்கி கொடுக்கும் வகையில், வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படுகின்றன.

அதனடிப்படையில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மூலம், மாபெரும் வேலைவாய்ப்பு முகாம், நாகர்கோவில், ஸ்காட் கிறிஸ்துவ கல்லூரியில் இன்று (21.12.2016) நடைபெற்றது.

இம்முகாமிற்கு தலைமையேற்ற, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் குத்துவிளக்கேற்றி, முகாமினை துவக்கி வைத்து, பேசும் போது தெரிவித்ததாவது:-

தமிழக அரசின் மூலம், மகளிர் திட்டம் வாயிலாக, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு பல்வேறு திட்டங்கள் மூலம், அவர்களின் வாழ்வாதாரம் உயர்வதற்கு வழிவகை செய்து வருகிறது. மேலும் படித்த, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கிட, மாவட்ட நிர்வாகம் அவ்வப்போது வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்திட தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில், நடப்பு ஆண்டில் இரண்டாம் முறையாக வேலை வாய்ப்பு முகாம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மகளிர் திட்டம் மூலம், இன்று நடைபெற்றது. கடந்த ஆண்டு மற்றும் இவ்வாண்டில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு படிப்புகளை முடித்த இளைஞர்கள் கலந்து கொண்டனர். இவர்களின் கடந்த இரண்டு வருடங்களில் சுமார் 1000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. தற்போது அவர்கள் இந்த நிறுவனத்தில் சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். மேலும் நமது மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பகுதியில் படித்து, வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு, வேலைவாய்ப்பு உருவாக்கிடும் வகையில், இன்று அகஸ்தீஸ்வரம் மற்றும் இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நாகர்கோவில் நகராட்சி பகுதிகளை சார்ந்த 8-ம் வகுப்பு முதல் தொழிற்பயிற்சி, பட்டபடிப்பு, டிப்ளமோ இன் பார்மஸி, நர்சிங், அனைத்து இளங்கலை மற்றும் முதுகலை (கலை அறிவியில் மற்றும் பொறியியல்) வரை படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கான மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் இன்று நடைபெற்றது.

நமது மாவட்டத்தை பொறுத்தவரை, 93 % படித்தவர்கள் உள்ளார்கள். இதில் 18 முதல் 35 வரை 100 % படித்தவர்களே இருக்கிறார்கள். ஆகையால் வேலைவாய்ப்பு என்பது நமது மாவட்டத்தை பொறுத்தவரை, மிகுந்த போட்டிகளை கொண்டிருக்கிறது.

எனவே முகாமில் பங்கேற்ற அனைத்து இளைஞர்களும், தங்களது கல்வி தகுதிக்கேற்ப அனைத்து நிறுவனங்களிலும் பங்கேற்பதுடன், தேர்வுகளில் நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் கலந்து கொள்ள வேண்டும். தேர்வுகளில் வெற்றி பெறாத இளைஞர்கள் மீண்டும் நடைபெறும் முகாமில் பங்கேற்பதோடு, அரசு நடத்தும் தேர்வுகளில் கலந்து கொண்டு, தங்களது திறமைகளை வெளிப்படுத்த வேண்டும். வெற்றி பெறும்வரை, மாணவர்கள் முயற்சித்து, கொண்டிருக்க வேண்டும். நேர்முக தேர்வில் வெற்றிபெற்ற மாணவர்கள், உடனடியாக அந்த நிறுவனத்தில் சேர்ந்து கொண்டு, சிறப்பான பணி மேற்கொள்வதோடு, நமது மாவட்டத்தில் உள்ள மற்ற மாணவர்களுக்கும் எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும்.

இன்று நடைபெற்ற முகாமில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிட, சுமார் 44 நிறுவனங்கள் கொண்டுவரப்பட்டது. இம்முகாமில் சுமார் 2 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர். திறமையான மாணவர்களுக்கு உடனடியாக பணி நியமன ஆணைகளும் வழங்கப்படவுள்ளது என தெரிவித்தார்.

இம்முகாமில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநரும், மகளிர் திட்டத்தின் திட்ட அலுவலருமான திருமதி. டி.ஹெட்ஸி லீமா அமலினி, மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. பிரம்மநாயகம், ஸ்காட் கிறிஸ்துவ கல்லூரியின் முதல்வர் எட்வின் ஞானதாஸ், உதவித்திட்ட அலுவலர்கள் (திறன் மற்றும் பணியமர்வு) திரு. பி. அந்தோணி சிலுவை, திருமதி. எம்.கலைச்செல்வி (சமூக ஒருங்கிணைப்பு மற்றும் நிறுவன கட்டமைப்பு), திரு. எம்.கே.பிச்சையா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.